# திராவிட மொழி இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

# Ethical Values as Revealed in Dravidian Literature

International Conference

**Volume-1**


முதன்மைப் பதிப்பாசிரியர்

பேரா. **சி. பரசுராமன்**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **ஜான்மனுவேல்**

முனைவர் **க. ரமேஷ்**

முனைவர் **இரா. செல்வராஜ்**

முனைவர் **இரா. பிரபாகரன்**

முனைவர் **சு. வேணு**

முனைவர் **ச. சாரதா**

முனைவர் **பா.அ.முனுசாமி**


Scanned by CamScanner

## நூல் விவரம்

நூல் பெயர் : திராவிட மொழி இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்
Ethical Values as Revealed in Dravidian Literature (Internationl Conference)

பதிப்பாசிரியர்கள் : பேரா. **சி.பரசுராமன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அரசினர் திருமகள் ஆலைக்கல்லூரி, குடியேற்றம்.
பேரா. முனைவர் **ஜான்மனுவேல்**
பேரா. முனைவர் **க.ரமேஷ்**
பேரா. முனைவர் **இரா.செல்வராஜ்**
பேரா. முனைவர் **இரா.பிரபாகரன்**
பேரா. முனைவர் **சு.வேணு**
பேரா. முனைவர் **எஸ்.சாரதா**
பேரா. முனைவர் **பா.அ.முனுசாமி**

மொழி : தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம்,

விலை : ரூ.800/–

பக்கங்கள் : 639+12 = 651

முதல் பதிப்பு : 25–06–2016 ஆனி 11

ஒளியச்சு : **அமிர்தகனி ஜெகவீரன்,**
சரவணா கிராபிக்ஸ், வேலூர்.
செல்: 98658 20640.

கிடைக்குமிடம் : ஏலகிரி முத்தமிழ் மன்றம்
நிலாவூர், நிலாவூர் அஞ்சல்
ஏலகிரிமலை, வேலூர் மாவட்டம்
தமிழ்நாடு–635 853.

வெளியீடு, உரிமை : **ஏலகிரி முத்தமிழ் மன்றம், ஏலகிரிமலை.**

அச்சிட்டோர் : டுடே பப்ளிகேஷன், சென்னை.

**ISBN : 978-93-81992-40-1**

Scanned by CamScanner

89. கிருஷ்ணகிரி வட்டார வழக்கு மொழி அமைப்பியலில் தமிழும் தெலுங்கும்
கோ.சீனிவாசன் ... 429

90. நெல்லும் மருதநில மக்களும்
சி.லலிதா ... 436

91. இலக்கியத்தில் காணப்படும் பண்பாட்டு கூறுகள்
மகேஸ்வரி (தமிழ்த்துறை) ... 442

92. மருதமலை இருளர் பழங்குடி மக்களின் வாழ்க்கை வட்டச் சடங்குகள்
மா.அ.சிவராமன் ... 447

93. சு.தமிழ்ச்செல்வியின் நாவல்களில் 'ஆண்'
டே. ஆனிமரிய ஜான்சி, ... 451

94. காமத்துப்பாலில் அறச்சிந்தனைகள்
சொ.பத்மநாபன் ... 455

95. பெரியாரின் பத்திரிகைகள் சந்தித்த அடக்கு முறைகள்
சீ.உதயகுமார் ... 463

96. பெண்ணின் வழித் தடையங்கள்
முதுமுனைவர் இரா.சங்கர் ... 467

97. யுவன் சந்திரசேகர் புனைகதைகளில் பெண்களின்நிலை
அ.ஜெயகிரீட் ... 473

98. காங்கை சொல்லும் பொருண்மையும்
முனைவர் பா.த.கிங்ஸ்டன் ... 476

99. வீ.ப.கா.சுந்தரனாரின் படைப்புகளில் கிறித்தவ இறையியல்
த.செபுலோன் பிரபுதுரை ... 486

100. சங்க இலக்கியத்தில் அரசியலறம்
முனைவர் இ.வாசுகி ... 492

101. இன்றைய இந்தியக்கல்வி முறைகளும் சவால்களும், தீர்வுகளும்
சி.சுதாகர், முனைவர் வெ.சிவசங்கர் ... 496

102. திருத்தொண்டர் காப்பியத்தில் விவிலியச் செய்திகள்
இரா.ஞானபால்ராஜ் ... 501

103. ஜவ்வாதுமலையில் வேட்டை தெய்வ வழிபாடு
ரே.கோவிந்தராஜ் ... 506

104. புறநானூற்றில் வீரப்பண்பு
ரே.கோவிந்தராஜ் ... 508

105. 'திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள்' –ஒரு பார்வை
பேராசிரியர். ஸ்ரீ.சசிகலா ... 511

106. இனிக்கும் இறைமொழி சுட்டும் வாழ்வியல் நெறிகள்
முனைவர் கே.இரா. கமலா முருகன் ... 515

Scanned by CamScanner

93

டே. ஆனிமாரிய ஜான்சி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வுமையம்,
பாத்திமா கல்லூரி, மதுரை.

# சு.தமிழ்ச்செல்வியின் நாவல்களில் ‘ஆண்’

‘காலம் காட்டும் கண்ணாடி, இலக்கியம்’ என்பர். ஒருசிறந்த இலக்கியம், தான் தோன்றிய அல்லது தன்னுள் பொதிந்துள்ள காலத்திய மக்களின் சூழல், உணர்வுகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள் உள்ளிட்ட பலவற்றைத் தன்னகத்தே கொண்டிருக்கும். அவ்வாறாயின் இக்கால இலக்கிய உரை நடைவடிவங்களுள் சிறுகதை, நாடகம் போன்றவற்றைவிட நாவலே இக்கூற்றை உறுதிப்படுத்தும். சமூகத்தை உள்ளது உள்ளவாறே பிரதிபலிக்க நாவலில் அதிக இடமுண்டு. இவ்வடிப்படையில்,சு.தமிழ்ச்செல்வியின் மாணிக்கம், அளம், கீதாரி, கற்றாழை, ஆறுகாட்டுத்துறை, கண்ணகி போன்ற நாவல்களின் வழி ஆணாதிக்க சமூகத்தைக் காண்பதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

ஒருநாடு, பல குடும்பங்களால் ஆனது. நாட்டின் வளத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படை, குடும்பநலம். ஒரு குடும்பத்திற்கு அடிப்படை, கணவனும் மனைவியும்.கணவனும் மனைவியும் அன்போடு ஒன்றிவாழும் குடும்பமே நலம் பெறும். சு.தமிழ்ச்செல்வியின் நாவல்களில் காணலாகும் குடும்பங்கள் பெரும்பாலும் சிதைந்த குடும்பங்களாகவே உள்ளன. நமதுசமூகம்,ஆணாதிக்கசமூகமாக இருந்ததன் வெளிப்பாடு இன்றளவும் காணப்படுகிறது. இன்று,பெண்கள் பலதுறைகளிலும் முன்னேறி இருந்தாலும் கூட, சமூகத்தைப் பொறுத்தவரை ஆணுக்கு நிகராகப் பெண் நடத்தப்படவில்லை என்பதேஉண்மை. இந்நிலை, சமூகத்தின் ஒரு அங்கமாகிய குடும்பத்திலும் இல்லாமல் இல்லை. ஆண் தன்னைவிடத் தாழ்வாகவே, பெண்ணைக் கருதுகிறான். தனக்கொருநீதி; பெண்ணுக்கொரு நீதி என்றே வாழ்கிறான். இதனால் கணவன் மனைவிக்கிடையே பலஉறவுச் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

‘கணவனை இழந்தபெண், விதவை; மனைவியை இழந்த ஆண், புதுமாப்பிள்ளை’ என்ற சமூக அநியாயநியாயத்தைப் பிரதிபலிப்பதாக ‘கண்ணகி’ நாவல் அமைகிறது. இந்நாவலின் கதைத்தலைவன் ஆசைதம்பி, தன் மனைவி இருக்கும் பொழுதே இரண்டாவது திருமணம் செய்துகொண்டு, அவளையும் வீட்டிற்கு அழைத்துவருகிறான். இது போதாதென்று இரண்டாவது மனைவியின் தங்கையிடமும் தவறாக